முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

61 T I

| | | |
|---|---|---|
| තෙවන වාර විභාගය 2023 (2024)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)<br>Third Term Examination 2023 (2024) | භූගෝල විද්‍යාව I, II<br>புவியியல் I, II<br>Geography I, II | 11 වන ශ්‍රේණිය<br>தரம் 11<br>Grade 11 |

| | |
|---|---|
| පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours | අමතර කියවීම් කාලය — මිනිත්තු 10 යි<br>மேலதிக வாசிப்பு நேரம் — 10 நிமிடம்<br>Additional Reading time — 10 minutes |

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

## புவியியல் I

அறிவுறுத்தல்கள்
- இவ் வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.
- எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.

- **01 தொடக்கம் 05 வரை உள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை அடைப்புக்குறியின் உள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளி கோட்டின் மீது எழுதுக.**

1) புவியின் கட்டமைப்பில் 2/3 சதவீதம் ……………………….... ஆகும் (புவியோடு, மூடி, மையம்)

2) இலங்கையில் அதிகமாகப் பயன்படுத்தப்படுவது ………………….. ஆகும் (அனல் மின்சாரம், பெற்றோலியம், நீர் மின்சாரம்)

3) புவிக்கோளத்தின் ஆட்டிக் வட்டத்திற்கும் வட முனைவிற்கும் இடையில் ……………………………. (அயனவலயம், இடைவெப்பவலயம், முனைவு வலயம்) அமைந்துள்ளது.

4) இலங்கையில் மிகவும் அதிகமாக ஏற்படும் இயற்கை இடர் ………………….. (நிலச்சரிவு, வரட்சி, சுனாமி) ஆகும்.

5) லங்காசயர் எனும் இரும்புத்தாது மையம் ……………………….. இல் அமைந்துள்ளது (ரஸ்யா, சீனா, ஐக்கிய அமெரிக்கா)

- **6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் சரி 'ச' ஐயும் பிழையாயின் பிழை 'பி' ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

6) சுண்ணாம்புக்கல் ஓர் அடையற்பாறை வகையாகும். (ச / பி)

7) மண்படையமைப்பில் C படை மிகவும் விருத்தியடைந்த மண் வகையாகும். (ச / பி)

8) கண்டப்பகுதியில் ஏற்படும் புவிநடுக்கம் சுனாமியை ஏற்படுத்துகின்றன. (ச / பி)

9) இலங்கையின் தென்மாகாணத்தின் காலி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வாழ்கின்றனர். (ச / பி)

10) இந்தியா உலகின் முன்னணி காரீய உற்பத்தி நாடாகும். (ச / பி)

- **11 தொடக்கம் 16 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

11) இலங்கையின் தேயிலையை அதிகளவு .................. வலயம் அதிகளவு இறக்குமதி செய்கின்றது.

12) இலங்கையின் 1: 50000 இடவிளக்கவியல் படங்களின் சமவுயரக்கோட்டு இடைவெளி ................. மீற்றர்கள் ஆகும்.


13) நிலநடுக்கம், நிலச்சரிவு, சுனாமி போன்றன ...................... இடர் வகையைச் சேர்ந்ததாகும்.

14) அவுஸ்திரேலியாவின் ........................... பள்ளத்தாக்கு ஆசியாவிற்கு வெளியே நெல் உற்பத்தி செய்யும் பகுதியாகும்.

15) மொனராகல மாவட்டத்தில் உள்ள ஒக்கம்பிட்டிய பிரதேசம் ........................... பிரசித்தமானதாகும்.

16) களப்பு, கழிமுகப்பிரதேசங்களில் ....................................... தாவர இனங்கள் பரவலாகக் காணப்படுகின்றன.

- **17 தொடக்கம் 19 வரையிலான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தை பயன்படுத்தி வெற்றிடத்தை நிரப்புக.**




17) பெரும்போக நெல் உற்பத்தியில் அதிக நெல் உற்பத்தி ......... ஆண்டு பதிவாகியுள்ளது.

18) 1985 மற்றும் 1986 ம் ஆண்டுகளில் பெரும்போக நெல் உற்பத்தி ............... தொன் காணப்படுகின்றது.

19) 2000 ம் ஆண்டிற்குப்பின் மிகக்குறைந்த நெல்உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது ............... ஆண்டாகும்.

- **20 தொடக்கம் 24 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

20) புவித்தகடுகள்
   1. ஆபிரிக்கத் தகடு
   2. இந்து அவுஸ்திரேலியத் தகடு
   3. தென்னமெரிக்கத் தகடு

காணப்படும் நாடு
A - இந்தோனேசியா
B - ஆர்ஜன்டீனா
C - லிபியா
D – கனடா

1. CAD 2. BDA 3. DCB 4. CAB (.........)

21) நெல்உற்பத்திய வலயம்
   1. உலர்வலயம்
   2. இடை வலயம்
   3. ஈர வலயம்

அமைந்துள்ள மாவட்டம்
A - குருனாகல்
B - அம்பாந்தோட்டை
C - கண்டி
D – காலி

1. ABD 2. DAC 3. BAD 4. BCD (.........)

22) சமுத்திர எல்லைகள்
1. ஆட்புல கடல் எல்லை
2. வெளிப்புற வலயம்
3. தனித்துவமான பொருளாதார வலயம்

கடல் மைல் எல்லை
A - 12 - 24 கடல் மைல்
B - 24 - 200 கடல் மைல்
C - 200 மேல் கடல் மைல்
D - 12 கடல் மைல்

1. DAB 2. DAC 3. ACB 4. BAC (.........)

23) பிரதான சுற்றுலா வலயம்
1. பாரம்பரிய நகரம்
2. தென் கரையோரம்
3. கிழக்குக் கரையோரம்

சுற்றுலா பிரதேசம்
A - ஹிக்கடுவ
B - தலதா மாலிகை
C - அருகம்பே
D - நீர்கொழும்பு

1. DAC 2. BAC 3. CDA 4. BCA (.........)

24) சமுத்திரங்கள்
1. பசுபிக் சமுத்திரம்
2. அத்திலாந்திக் சமுத்திரம்
3. இந்து சமுத்திரம்

சங்கமிக்கும் நதிகள்
A - யெனிஸி ஆறு
B - கங்கை நதி
C - கொங்கோ நதி
D - அமேசன் நதி

1. ACD 2. DAB 3. CDB 4. BDC (.........)

- **25 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

25) இலங்கையின் இடவிளக்கவியல் படங்களில் அதிவேகப் பாதை எந்நிறத்தில் காட்டப்படுகின்றது.
1. சிவப்பு 2. ஊதா
3. மஞ்சள் 4. கறுப்பு (.........)

26) பின்வருவனவற்றுள் பதுப்பிக்கக்கூடிய வளங்களில் ஒன்று
1. வளமான மண் 2. காற்று
3. உயிர்சுவட்டு எரிபொருள் 4. பாறைகள் (.........)

27) இலங்கையில் நீர்மின்சாரம் அதிகளவு பயன்படுத்தப்படுவது
1. வீட்டுத்தேவைக்காக 2. கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு
3. வர்த்தக நோக்கங்களுக்கு 4. வீதி விளக்கிற்கு (.........)

28) ஐம்பெரும் ஏரிகளில் ஒன்று
1. ஒன்டாரியா 2. விக்டோரியா
3. தித்திக்கா ஏரி 4. வினிபெக் (.........)

29) புவி வளிமண்டலத்தில் 78.09 சதவீதம் காணப்படும் வாயு யாது?
1. ஆகன் 2. ஒக்ஸிசன்
3. நைதரசன் 4. காபனீரொக்சைட் (.........)

30) அண்மைக்காலங்களில் மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு?
1. ஜேர்மனி 2. ஜப்பான்
3. ஐக்கிய இராச்சியம் 4. சீனா (.........)

31) சிறு ஏற்றுமதி பயிர்கள் அதிகளவு பயிரிடப்படும் இரண்டு முக்கிய மாவட்டங்கள் யாவை?
1. காலி மற்றும் மாத்தறை 2. கேகாலை மற்றும் இரத்தினபுரி
3. மாத்தளை மற்றும் கண்டி 4. மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை (.........)

32) உவர் நீர் மீன்பிடியில் பிடிக்கப்படும் மீன்வகைகளைக் காட்டும் விடை யாது?
1. இறால், திலாபியா, தோரா
2. சாலை, ஹுருள்ளா, பியாமெஸ்ஸா
3. இறால், தல்லா, ககுலுவா
4. திலாபியா, இறால், நண்டு (……..)

33) துந்திராக்காடுகளில் காணப்படும் தாவர வகைகளை மட்டும் கொண்ட விடைத் தொகுதி
1. ஓக், செஸ்நட், பீச்
2. ஸ்புரூச், பர், பொப்லர்
3. அகேஷியா, பீச், பைன்
4. பைன், மேபல், ஏஸ் (……..)

34) புவியின் நீர்ப்பரம்பல் தொடர்பான பிழையான விடையைத் தெரிவு செய்க
1. ஆறுகள் 1 சதவீதம்
2. ஏரி நீர் 52 சதவீதம்
3. உவர் நீர் 38 சதவீதம்
4. வளிமண்டல நீர் 8 சதவீதம் (……..)

35)
- குளிர்ச்சியான காலநிலை
- வேறுபயிர்கள் பயிரிடமுடியாத எல்லை நிலங்கள்

மேலே குறிப்பிட்ட பண்புகளுடன் தொடர்புடைய விவசாய நடவடிக்கை யாது
1. கால்நடை வளர்ப்பு
2. கோதுமை
3. சோளம்
4. இறப்பர் (……..)

36) உலகில் இரும்பு மற்றும் உலோகத்தின் தேவை குறைவதற்கு முக்கிய காரணம் யாது
1. பைபர் கண்டுபிடிப்பு
2. அலுமினியம் கண்டு பிடிப்பு
3. செம்பு கண்டுபிடிப்பு
4. பிளட்டினம் கண்டுபிடிப்பு (……..)

37) 1:50000 இடவிளக்கவியல் படத்தின் பௌதீக அம்சங்களில் ஒன்று
1. வீதி வலைப்பின்னல்
2. நீர்ப்பாசனம்
3. தரைத்தோற்றம்
4. நிலப்பயன்பாடு (……..)

- **A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தலைப்புகளின் சோடிகளை நன்கு அவதானித்து 38 - 40 வரையுள்ள வினாக்குளுக்கு விடை தருக.**

A. 1. வறுமை
   2. போசனைக் குறைபாடு
B. 1. அபிவிருத்தி
   2. சமூகநலச் செலவுகள்
C. 1. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்
   2. கலாச்சாரம்
D. 1. குடியேற்றம்
   2. உட்கட்டமைபபு

38) பின்வரும் சோடிகளில் இரண்டாவதின் அதிகரிப்பு முதலாவதின் குறைவிற்கு காரணியாக அமைவது
1. A   2. B   3. C   4. D (……..)

39) பின்வரும் சோடிகளில் முதலாவதின் அதிகரிப்பு இரண்டாவதின் வீழ்ச்சிக்கு காரணியாக அமைவது
1. A   2. B   3. C   4. D (……..)

40) பின்வரும் சோடிகளில் எது முதலாவதின் அதிகரிப்பு இரண்டாவதின் அதிகரிப்பிற்கு காரணியாக அமைவது
1. A   2. B   3. C   4. D (……..)

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

61 T II

තෙවන වාර විභාගය 2023 (2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)
Third Term Examination 2023 (2024)

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

11 වන ශ්‍රේණිය
தரம் 11
Grade 11

## புவியியல் II

- இவ்வினாத்தால் I,II எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி I உள்ள வினாக்கள் கட்டாயமானது அதில் (a), (b), (c) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுத வேண்டும்
- பகுதி II இருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்
- எல்லாமாக ஐந்து வினாவுக்கு விடை எழுத வேண்டும்

## பகுதி I

1. a) 1: 50000 இடவிளக்கவியல் படத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

- 1 தொடக்கம் 5 வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்கள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.

1) சட்டகம் A இனால் காட்டப்படும் நீர் வடிகாலமைப்பு அம்சம் யாது? (1 புள்ளி)
(மியாந்தர், பின்னிய ஆறு, சதுப்பு நிலம்)

2) படப்பிரதேசத்தில் C இனால் காட்டப்படும் பௌதிக அம்சம் யாது? (1 புள்ளி)
(பாறை, மணல் மேடு, குன்று)

3) படப்பிரதேசத்தில் F இனால் குறித்துக்காட்டப்படும் பண்பாட்டு அம்சம் யாது? (1 புள்ளி)
(உள்ளூராட்சி எல்லை, கால்வாய், நடை பாதை)

4) G எனும் எழுத்தினால் காட்டப்படும் இயற்கைத் தாவர வகை யாது? (1 புள்ளி)
(காடு, பற்றைக்காடு, புல் நிலம்)

5) படப்பிரதேசத்தின் வடகிழக்குப் மூலையில் காணப்படுகின்ற வர்த்தகப் பயிர் யாது? (1 புள்ளி)

6) சட்டகம் E னால் காட்டப்படும் பகுதியில் காணப்படும் இரண்டு பொதுச்சேவை நிலையங்களைப் பெயரிடுக. (1 புள்ளி)

- படப்பிரதேசம் பற்றிய மூன்று கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு கூற்றையும் வாசித்து அவை சரியாயின் (ச) எனவும் பிழையாயின் (பி) எனவும் விடைத்தாளில் தரப்பட்டுள்ள வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.

7) நாட்பக்கல் B யினுள் ஆரை வடிகாலமைப்பு வடிவம் காணப்படுகின்றது. (1 புள்ளி)

8) படப்பிரதேசத்தின் பிரதான ஆறு தெற்குத் திசையில் பாய்கின்றது. (1 புள்ளி)

9) படப்பிதேசத்தினுள் பெரும்பகுதி நெற்பயிர்ச்செய்கை காணப்படுகின்றது. (1 புள்ளி)


b) 1 -5 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. தரப்பட்டுள்ள உலகப்படத்தில் இருந்து ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையைக் குறித்துக் காட்டும் சரியான ஆங்கில எழுத்தினை தெரிவு செய்து எழுதுக.

1) ஒக்கோட்ஸ் படல் - A, B, C
2) ஐஸ்லாந்து - I ,J, K
3) மெக்ஸிகோ வலைகுடா - P, Q, R
4) நைகர் நதி - S, T, U
5) இஸ்ரேல் - F, G, H (5 புள்ளிகள்)

c) 1 -5 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. இலங்கைப்படத்தில் இருந்து ஒவ்வொரு வினாவுக்குரிய சரியான விடையைக் குறித்துக்காட்டும் சரியான எழுத்தினைத் தெரிவு செய்து எழுதுக.


1) மாத்தளை மாவட்டம் - A, B, C
2) கல் ஓயா - G, H, I
3) சமனல வாவி - D, E, F
4) யாழ்ப்பாணம் - M, N, O
5) பெல்லன்வில சரணாலயம் - R, S, T (5 புள்ளிகள்)

2. புவியின் வளிமண்டலத்தின் படைகளைக் காட்டும் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.




i. இலக்கம் 2 மற்றும் 4 இனால் காட்டப்படும் படைகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
ii. இல. 3 னால் காட்டப்படும் படையின் மூன்று பண்புகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
iii. a) A இனால் காட்டப்படும் எல்லை யாது?
b) வளிமண்டலத்திற்கும் கற்கோலத்திற்கும் இடையில் நீர் பரிமாற்றம் செய்யப்படும் செயன்முறையின் பெயர் என்ன?
c) மேலே குறிப்பிட்ட செயன்முறையின் இரண்டு செயற்பாடுகளை சுருக்கமாக விவரிக்குக. (5 புள்ளிகள்)

- **வினா 3 மற்றும் 4 ற்கு கீழே தரப்பட்டுள்ள உலகப்படத்தைப் பயன்படுத்துக.**




3. i) A மற்றும் B யினால் குறித்துக்காட்டப்பட்டுள்ள இரண்டு வகையான காடுகளின் வகைகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)
ii) a) C யினால் குறித்துக்காட்டப்படும் காட்டின் வகை யாது
b) மேலே குறிப்பிட்ட காட்டு வகை பரவிக்காணப்படும் இரண்டு பிரதேசங்களைப் பெயரிடுக. (3 பள்ளிகள்)
iii) a) இலங்கையின் அயனமழைக்காடுகளின் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக.
b) இலங்கையின் வனப்பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படும் இரண்டு நடவடிக்கைகளை சுருக்கமாக விவரிக்குக. (5 பள்ளிகள்)

(7) WWW.PastPapers.WiKi (6)

Download Term Test Papers, Short Notes From One Place!

4. i) இலக்கம் 1 இனால் காட்டப்படும் கோதுமை பயிரிடும் பிரதான நாட்டினையும் இலக்கம் 2 இனால் காட்டப்படும் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் நாட்டினையும் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) இறப்பர் பயிர்ச்செய்கைக்கு அவசிமான மூன்று பௌதிகக் காரணிகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) இலங்கையின் பாற் பண்ணை உற்பத்தியை விரிவுபடுத்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மூன்றை விவரிக்குக. (5 புள்ளிகள்)

5. i) உலகின் கப்பல் கட்டும் கைத்தொழிலில் முன்னணி வகிக்கும் இரண்டு நாடுகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) பருத்தி நெசவுக் கைத்தொழிலின் மூன்று போக்குகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) a) இலங்கையின் உற்பத்திக் கைத்தொழில் எதிர்நோக்கும் இரண்டு சவால்களை குறிப்பிடுக.

b) இலங்கையின் சுற்றுலாக்கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளிகள்)

6. i) உலக சனத்தொகை வளர்ச்சியின் இரண்டு காலகட்டங்களை பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) a) 2012ம் ஆண்டு கணிப்பீட்டின் படி இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் யாது?

b) இலங்கையின் அதிக சனத்தொகை வளர்ச்சி வீதம் மற்றும் மிகக் குறைந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் கொண்ட மாவட்டங்களைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

iii) இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பின் முனைப்பான மூன்று அம்சங்களை சுருக்கமாக விவரிக்குக. (5 புள்ளிகள்)

7. i) சூழல் தொகுதியில் பாதிப்பை ஏற்படுத்தும் இரண்டு மானிட செயற்பாடுகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) புவி வெப்பமடைதலினால் ஏற்படும் மூன்று விளைவுகளைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்பினைக் குறைப்பதற்கு நீர் எவ்வாறு பங்களிப்பீர் என்பதை இரண்டு காரணிகளின் மூலம் விவரிக்குக. (5 புள்ளிகள்)

8.
- பெரகுடின்
- எட்னா
- காரகற்றோவா
- விசூவியஸ்

i) மேலே குறிப்பிட்ட எரிமலைகளில்

a. இத்தாலியில் அமைந்துள்ள எரிமலையை பெயரிடுக.

b. இந்தோனேசியாவில் அமைந்துள்ள உரிமலையைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

- ஹரிக்கேன்
- சைக்லோன்
- வில்லிவிலீஸ்
- தைபூன்

ii) மேலே பெயரிடப்பட்ட சூறாவளியின் வகைகளில்

a. வட அத்திலாத்திக் சமுத்திரத்தில்

b. வங்காள விரிகுடா மற்றும் இந்து சமுத்திரப் பகுதி

c. கிழக்கு ஆசியா போன்ற பிரதேசங்களில் அழைக்கப்படும் பெயர்களை பெயரிடுக. (3 புள்ளிகள்)

iii) a. இலங்கையில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படும் இரண்டு ஆறுகளைப் பெயரிடுக.

b. வெள்ள அனர்த்தத்தைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் இரண்டு நடவடிக்கைகளை விவரிக்குக. (5 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
(7) WWW.PastPapers.WiKi (7)



Download Term Test Papers, Short Notes From One Place!

# LOL.lk
## BookStore

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**